**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4407

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 03.08.2021

Accepted: 15.09.2021

Published: 01.10.2021

Citation:
Gunapalasingam, V. "Applying Folklore Sources in the Historiography of Tiruppadai Temples – A Study." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 2, 2021, pp. 12–21.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4407

*Corresponding Author:
gunapalasingamv@esn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Applying Folklore Sources in the Historiography of Tiruppadai Temples – A Study

**Dr. V. Gunapalasingam**
*Head & Senior Lecturer*
*Department of Hindu Civilization*
*Eastern University, Sri Lanka*
http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract -** Muruga worship is a unique worship system of the worship systems existing in Sri Lanka and this uniqueness is intensively revealed in the Tiruppadai temples of Eastern region of Sri Lanka. The antiquity of these temples could be known by folklore sources which are chief sources for knowing the old tradition of the temples. The folklore sources could be classified and viewed into formulae, poetry, tales, paththasi and koothu. Infect, earlier, there was a method or tradition among intellectuals to create history based on literature, inscription, copperplates, coins, and other archeological pieces of evidence and instead, 19th& 20th centuries, a new method was introduced to make historiography based on the sources of folklore and the folklore sources have created new dimensions in the historiography of the societies which preserve customs and beliefs. Applying the above theory in matters related to the history of Tiruppadai Temples of Eastern region, it could be observed that history of a regional society emerges to exist.

**Keywords:** Architecture, Tiruppadai temples, Folklore, history, Sri Lanka, Murugan worship, Poetry, Eastern Sri lanka

**References**

1. Gunapalasingam, V. (2015). Murugan Worship in Sri Lanka Special Reference to Murugan worship systems in Eastern Sri Lanka (Ph.D., Unpublished) Univesity of Jaffna, Srilanka.
2. Indrapala, K. (1980). Sri Lankan Tamil History and Folklore, K.Sivathamby(ed.) in Sri Lankan Tamil Folklore,) Univesity of Jaffna, Srilanka.
3. Kamalanathan, S.E. (ed.) (2005). Mattakalappu Purva Sariththram, Kumaran Publications, Colombo.
4. Kandiah, V.C. (1997). Mattakalappu Saiva Kovilkal, Hindu Religious & Cultural affairs, Colombo.
5. Kandiah, V.C. (ed. 1969) Anuthara Drama, Editorial Address, Batticaloa.
6. Mahadeva, I. (2003). Early Tamil Epigraphy, Medrass.
7. Maunaguru, S. (1980). Social Necessities of Folklore- Social Aspect and Current trend of Eastern Sri Lankan Traditional Theatre – A Study, K.Sivathamby (ed.) in Sri Lankan Tamil Folklore, Univesity of Jaffna, Srilanka.
8. Narmatha Tamil Dictionary (2013).
9. Natarajah, F.X.C. (ed.) (1998). *Mattakalppu Maanmiyam*, Cultural council, Batticaloa.
10. Paramasivan, T. (1989). Alagar Kovil, Madurai Kamaraj University, Madurai, Tamilnadu.
11. Pathmanathan, S. (1994). Sri Lankan Hindu Temples, Hindu Religious & Cultural affairs, Colombo.

12. Pathmanathan, S. (2000). Hindu culture in Sri Lanka, Hindu Religious & Cultural affairs, Colombo.
13. Pathmanathan, S. (2006). Sri Lankans Tamil Inscriptions-I, Hindu Religious & Cultural affairs, Colombo
14. Pathmanathan, S.(2013). Sri Lankans Tamil Inscriptions-II, Hindu Religious & Cultural affairs, Colombo.
15. Sivathamby, K. (ed.) (1980) in Sri Lankan Tamil Folklore, Univesity of Jaffna, Srilanka.
16. Tamil Dictionary, University of Madras, Chennai.
17. Tylor, E.B. (1876). Researches in ti the Early History of mankind, Estes & Lauriat.
18. Vansina, J. (1965), Oral Tradition- A Study in Historical Methodology, Routledge & kegan paul Ltd, London.
19. Venkatasamy, Mailai, Seeni (1989) Brahmi Inscriptions of Sangam Period, P.57
20. Gopalasingam, S (2007) Malaiyala Naadum Mattakalappum, Athavan Press, Batticaloa.

# திருப்படைக் கோயில்களின் வரலாற்று வரைபில் நாட்டார் வழக்கியல் மூலங்களின் பிரயோகம் – ஓர் ஆய்வு

***கலாநிதி வ. குணபாலசிங்கம்***
தலைவர்மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*இலங்கையில் வழக்கிலுள்ள வழிபாடுகளில் முருக வழிபாடு தனித்துவமானது. இத்தனித்துவத்திலே இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள திருப்படைக்கோயில்கள் மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துகின்றன. இக்கோயில்களின் புராதனம் பற்றி அறியக்கூடிய மூலங்களிலே நாட்டார் வழக்கியல் மூலங்கள் மிகப்பிரதானமானவை. அவற்றினை வாய்ப்பாடுகள்* (Formulae), *செய்யுட்கள்* (Poetry), *கதைகள்* (Tales)*, பத்தாசிகள்*(paththasi)*,நாட்டுக்கூத்துக்கள்*(Koothu)*எனவகைப்படுத்திநோக்கமுடியும். இலக்கியங்களையும், கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும், நாணயங்களையும், இதர தொல்லியற் சின்னங்களையும் வைத்து வரலாறு வரையப்படுகின்ற வழமைக்கு மாறாக நாட்டார் வழக்கியல் மூலங்களை வைத்து வரலாறு வரைகின்ற முறைமை பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் அறிமுகமாகியது. அந்தவகையில் பாரம்பரியங்களையும், நம்பிக்கைகளையும் பேணுகின்ற சமுதாயங்களினது வரலாற்று வரைபில் நாட்டார் வழங்கியல் மூலங்கள் புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்துள்ளன. இக்கோட்பாட்டினைப் பிரயோகித்து கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களின் வரலாறு தொடர்பான விடயங்களை நோக்குமிடத்து, குறித்த பிராந்தியத்தின் சமுதாய வரலாறு மேலெழுவதனை அவதானிக்க முடிகின்றது.*

***முக்கியச்சொற்கள்:*** *திருப்படைக் கோயில்கள், நாட்டார் வழக்கியல் மூலங்கள், வரலாற்று மூலங்கள், இலங்கை, கிழக்கிலங்கை, முருக வழிபாடு, கட்டுமானம்.*

**அறிமுகம்**

தமிழகத்தில் சிறப்புற்று விளங்குகின்ற முருகன் கோயில்களை ஆறுபடை வீடுகள் என அழைப்பது போன்று, இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் அமைந்துள்ள பழமையான முருகன் கோயில்களைத் திருப்படைக் கோயில்கள் என அழைக்கும் வழக்கம் உண்டு. மட்டக்களப்புத் தமிழ் வழக்கிலே “திருப்படை” என்னும் சொல் கோயிற் திருவிழாக்களுடன் சம்பந்தப்பட்டது. இச்சொல் மட்டக்களப்பு மான்மியத்தில் பங்குகூறும் கல்வெட்டிலும், (நடராஜா, எப். எக்ஸ். சி 1998:89) மட்டக்களப்புப் புர்வ சரித்திரத்தில் திருப்படைக்களஞ்சியம் (கமலநாதன், சா. இ 2005: 55) என்னும் பகுதியிலும் காணப்படுகின்றது. இச்சொல் திருவிழா வழமைகளுடன் தொடர்புற்றுக் காணப்படுவதன் காரணமாக, அக்காலத்தவர் இத்திருவிழா வழமைகளைப் பின்பற்றுகின்ற கோயில்களைத் திருப்படைக்கோயில்கள் என வழங்கியிருக்கலாம். பிற்காலத்தில் அறிஞர்களிடையே இக்கோயில்கள் சம்பந்தமான சிந்தனையில் கருத்து முரண்பாடுகள் தோன்றத் தொடங்கியுள்ளன. இவை தனித்து ஆராயப்பட வேண்டியவை. வேல் என்பது படைக்கலமாக மாத்திரமன்றி முருக வணக்கத்திற்குரிய சின்னமாகவும் திகழ்கின்றது. முருகனின் திருவுருவம் இல்லாது வேல் மட்டும் தாபனம்

பண்ணப்பட்டுள்ள வழிபாட்டுக்குரிய தலங்கள் தமிழகத்திலும், இலங்கையிலும் பலவுள்ளன. இத்தகைய கோயில்களின் வகைக்குள் கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்கள் அடங்குகின்றன. திருப்படைக் கோயில்களுக்கு வி.சி.கந்தையா வரைவிலக்கணம் கூறும்போது, கருவறையில் முருகனின் படைக்கலமான வேற்படையை வைத்து வழிபாடு இயற்றப்படுகின்ற கோயில்கள் திருப்படைக்கோயில்கள் எனக் கூறியுள்ளார். (கந்தையா, வி.சி 1997: 48) மட்டக்களப்புச் சைவக்கோயில்கள் என்ற நூலில் திருப்படைக் கோயில்களாகத் திருக்கோயில் சித்திர வேலாயுதர் கோயில், மண்டூர் முருகன் கோயில், கோவில் போரைதீவு சித்திரவேலாயுதர் கோயில், சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில், வெருகலம்பதி சித்திரவேலாயுத சுவாமி கோயில் என அடையாளப்படுத்து கின்றார் (கந்தையா,வி.சி1997:48)

## 2. திருப்படைக் கோயில்களும் - நாட்டார் வழக்கியல் மூலங்களும்

திருப்படைக் கோயில்களிலே பெரும்பாலன கோயில்களின் பழமையான வரலாறு கூறவல்ல சாசனங்களோ இலக்கியக் குறிப்புக்களோ கிடையாது. கிடைத்துள்ள சாசனங்கள் காலத்தாற் பிந்தியவை. இந்நிலையிலே அறியக்கிடைக்கும் சான்றுகள் நாட்டார் வழக்கியல் மூலங்களாகவே உள்ளன. வரலாற்று ஆராய்ச்சியில் மரபு வழிக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் அண்மைக் காலத்திலே இவற்றின் நிலைமை மாறத்தொடங்கியுள்ளன. மரபுவழிக் கதைகள் சார்ந்த ஆதாரங்களை வரலாற்றாராய்ச்சிக்கு மூலமாகக் கொள்ளுகின்ற புதிய முறையியல் (Methodology) பேணப்பட்டு வருகின்றன.

வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சமுதாயத்தினரின் வரலாற்றினை அறிந்து கொள்ள மரபுவழிக் கதைகளை ஆதாரமாகக் கொள்ளலாம் என்ற கருத்து 19ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஈ.பி.டைலர் (E.B.Tylor 1832 - 1917) என்ற மானுடவியலாளர் தனது முக்கியமான படைப்புக்களாகிய Researches in to the Early Hitory of Mankind-1865, Primitive Culture -1871' என்ற நூல்களிலே நாட்டார் வழக்கியற்சான்றுகளை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கின்றார். அந்நூலில், விவசாயக்குடிகள், சமகாலத்தில் வாழும் பழங்குடியினர் ஆகியோர் மத்தியிலே நிலவும் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துச் சமுதாயத்தினரின் கருத்துக்களை அறிந்து கொள்ளமுடியும் எனக் கூறியுள்ளார். (Tylor, E.B1878:33)

வாய்மொழி மரபுகளை ஆபிரிக்காவின் வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுத்திய வரலாற்றாசிரியர்களில் ஜான் வன்ஸினா (Jan Vansina) குறிப்பிடத்தக்கவர். நாட்டார் வழக்காற்றியல் மூலங்களை வரலாற்றாய்வுக்கு உபயோகிக்கின்ற முறைமையை (System) விபரமாக விளக்குகின்றார். அவர் "நாட்டார் வழக்காற்றியல் மூலங்களை மேல்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்", 6 (Vansina, J 1969:114)

1. Formulae - வாய்ப்பாடுகள்
2. Poetry - செய்யுட்கள்
3. Lists - பட்டியல்கள்
4. Tales - கதைகள்
5. Commentaries - உரைகள்

என்பனவாகும். திருப்படைக்கோயில்களின் வரலாற்றினைப் பொறுத்தவரையில் இதே போன்ற வகைப்படுத்தலை பின்பற்றப்பட வேண்டிய அவசியம் கிடையாது. இதில் ஒரு சில மாற்றங்களைச் செய்து எமக்குக் கிடைக்கும் நாட்டார் வழக்கியல் அம்சங்களை ஆராயலாம். இம்மரபுகளை 1. வாய்ப்பாடுகள் 2. செய்யுட்கள் 3. கதைகள் 4. பத்தாசிகள் 5. நாட்டுக் கூத்துக்கள் என ஐந்து வகைக்குள் அடக்கி, திருப்படைக் கோயில்களின் "பழமையான வரலாற்று வரைபுக்கு மேற்குறித்த

மூலங்களை எவ்வாறு உபயோகிக்கலாம் என்பதனை ஆராயமுடியும்.

**வாய்ப்பாடுகள் (Formulae)**

வாய்ப்பாடுகள் என்னும் வரையறையானது ஒரே தன்மையான சொற்களை அல்லது சொற்றொடர்களைக் குறித்து நிற்கின்றது. இதனை சுத்திரம், மரபு வழிப்பெயர், விருதுப்பெயர், வழக்காற்றுப்பெயர் என்றும் கூறலாம். நாட்டார் வழக்கியலில் இத்தகைய சொற்களும், சொற்றொடர்களும் இடம்பெறுவது வழக்கம். அந்தவகையில் திருப்படைக் கோயில்களின் நிருவாக முறைமையில் வண்ணக்கர் என்னும் மரபுவழியான விருதுப்பெயர் குறிப்பிடற்குரியது.

வண்ணக்கன் என்னும் சொல் தென்னிந்திய பிரதேசங்கள் சிலவற்றின் தொடர்புகளையும் நினைவுபடுத்துகின்றன. இச்சொல் ஈரோடு மாவட்டம் அரச்சலூர் கல்வெட்டில் காணப்படுகின்றது. இக்கல்வெட்டு பிற்காலத் தமிழ் பிராமி வடிவில் காணப்படுவதுடன் கி.பி.3ஆம் நூற்றாண்டிற்குரியது எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. (Mahadeva, I…. 584) அக்கல்வெட்டின் வாசகம்,

> **“எழுத்துப் புணருத்தான் மணிய வண்ணக்கன் தேவன் சாத்தன்”**
>
> ***(மயிலை சீனி.வேங்கடசாமி.1989: 57)***

என அமைந்துள்ளது. இக்கல்வெட்டைப் படித்த ஐராவதம் மகாதேவன் மணிகளைப் பரிசோதிக்கும் தொழிலை மேற்கொண்டவன் மணியவண்ணக்கன் எனக்கூறுகின்றார். கொங்கு நாட்டிலே கொங்கு வேளாளரில் வண்ணக்கர் கோத்திரம் என்ற பிரிவு தற்காலத்திலும் வழக்கிலுள்ளது. வண்ணக்கன் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்கள் எட்டுத் தொகை பாடிய சில புலவர்களின் பெயர்களாகவும் அமைந்துள்ளன. வடம வண்ணக்கன் தாமோதரனார், வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார், வற்றூற்று வண்ணக்கன் தத்தனார், வண்ணக்கன் கோமருங்குமரனார் ஆகியோரைக் குறிப்பிட முடியும். (புறநானூறு 125, 172 ஆம் பாடல்கள், குறுந்தொகை 85 ஆம் பாடலின் ஆசிரியர்களின் பெயர்கள் வண்ணக்கன் என்ற பெயரைத் தாங்கியுள்ளன). மலையாள தேசத்திலே முக்குவரின் சமயச் சடங்குகளைச் செய்த சமயப் பெரியாரை வாணக்கன் என்று குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்குரியது. (பத்மநாதன், சி 1994:71) வண்ணக்கன், வாணக்கன் என்னும் இரு சொற்களின் உருவாக்கத்திலும், ஒலியமைப்பிலும் நெருங்கிய தொடர்பினைக் காணமுடிகின்றது.

வண்ணக்கன் என்னும் சொல்லுக்கு “நாணயங்களைப் பரிசோதிப்பவர்” (நர்மதாவின் தமிழ் அகராதி, 2013:785) எனவும், “காரிய நிருவாகி” (தமிழ்ப் பேரகரமுதலி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை) எனவும் அகராதிகள் பொருள் கூறுகின்றன. வண்ணக்கன் என்னும் சொல்லுக்கு இவற்றினைப் பொருளாகக் கொள்வோமானால் கிழக்கிலங்கைத் திருப்படைக் கோயில்களின் நிருவாகப் பொறுப்புக்களை ஏற்று நடாத்துகின்ற கோயில் பரிபாலகர்களைக் குறிக்கும் வண்ணக்கர் என்னும் சொல்லுக்கு அது நிகரானது எனக் கொள்ளமுடியும். எனவே ஐராவதம் மகாதேவன் வாசித்து வியாக்கியானம் செய்த பிராமிச்சாசனத்தின் பொருள் இங்கு குறிப்பிடற்குரியது. அவரது கருத்தின் படி மணிகளைப் பரிசோதிப்பவன் வண்ணக்கன் எனக்கொண்டால் அவனை ஏதோ ஒரு நிருவாகப் பதவி வகித்தவனாகக் கொள்ள இடமுண்டு. எனவே தென்னிந்திய செல்வாக்கினாலே கிழக்கிலங்கைக் கோயில்களில் வண்ணக்கர் முறை வழக்கத்தில் வந்தது எனக் கருதமுடியும். அத்துடன் திருப்படைக் கோயில்களின் பழமையான வரலாற்றினைக் கணிப்பதற்கு அங்கு வழக்கிலுள்ள வண்ணக்கர் என்னும் மரபு வழியான விருதுப் பெயரை நம்பகமான நாட்டார் வழக்கியல் மூலமாகக் கொள்ள முடியும்.

வாய்ப்பாடுகள் என்னும் மரபுவழியான வரலாற்று மூலங்களில், குலங்களின் பெருமைகளைப் பிரதிபலித்துக் காட்டும் குடிமுறைமைகளையும் உள்ளடக்கலாம். மட்டக்களப்பு தேசத்தின் சாதியமைப்பில் குடிமுறைமை பிரதானமானது. இக்குடி முறைமையை மையப்படுத்தித் திருப்படைக் கோயில்களின் நிருவாக முறையும், தொழும்புகளும் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடற்குரியது. இந்நடைமுறை மாகோனால் வகுக்கப்பட்டது என மட்டக்களப்பு புர்வசரித்திரம் கூறுகின்றது. இலங்கை வரலாற்றில் மாகோனது ஆட்சிக் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகின்றது. (பத்மநாதன், சி 2000:148)

### செய்யுட்கள் (Poetry)

வரலாற்றியல் ஆய்வுக்குப் பயன்படக் கூடிய முக்கியமான நாட்டார் வழக்கியற் சான்றுகள், செய்யுள் வடிவிலிருக்கும் வாய்மொழி இலக்கிய வகைகளாகும். இச்செய்யுட்கள் வரலாற்றுச்செய்யுள், மெய்க்கீர்த்திச் செய்யுள் என இருவகைப்படும். சில வரலாற்றுச் சம்பவங்களைப் பொருளாகக் கொண்ட செய்யுட்கள் நாட்டார் வழக்கில் இடம்பெறுவது ஒரு பொதுவான அம்சம் எனலாம்.

கிழக்கிலங்கை வரலாற்றைப்பற்றிக் கூறும் பிரசித்திபெற்ற "மட்டக்களப்பு மான்மியம்" உண்மையில் நாட்டார் வழக்கியலில் வரலாற்று மரபுகளாக இருந்தவற்றைத் திரட்டிக் கூறும் நூலே ஒழிய, சம்பவங்கள் நடைபெற்ற சம காலங்களிற் பதிவு செய்யப்பட்டோ, முறையாகப் பேணப்பட்டோ வந்த மரபுகளை உள்ளடக்கியிருக்கும் நூலன்று. (இந்திரபாலா, கா 1980: 68) இருப்பினும் இதனாற் கிடைக்கும் முக்கிய எழுத்தாதாரங்கள் மரபுவழிக் கதைகளிலிருந்து சற்று வேறுபடுவதைக் காணலாம்..

மட்டக்களப்பு தேசத்திலே கிடைத்த வரலாற்றுச் செய்யுட்களில் முக்கியமான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. அங்கு சிறப்பாகக் கல்வெட்டு என்னும் பெயரால் வழங்கும் செய்யுட்கள் மிகவும் பயனுள்ளவையாய் இருப்பதனைக் காணலாம். இலக்கிய வகைகளிற் கல்வெட்டு என்னும் ஒரு வகையும் உண்டு. இக்கல்வெட்டு இலக்கியங்களிற் திருப்படைக் கோயில்கள் பற்றிய ஒரு சில குறிப்புக்களைக் காணமுடியும். பங்கு கூறுங்கல்வெட்டில் திருக்கோயில் பற்றிய குறிப்பு மேல்வருமாறு பயின்று வருகின்றது.

**"பண்டுபண்டாகப் பகர்ந்தனரு லகில்
மட்டக்களப்பில்வருமுறை யீதெனச்
செட்டிகளுடனே செப்பினன் குகனும்
அப்போ வணிகர் அகமகிழ்வாகிக்
செப்பரிதான திருக்கோயில் தனக்கு
கொடி துவசக்கம்பம் கோபுர மண்டபப்."
(நடராஜா, எப். எக்ஸ். சி 1998:89)**

என்னும் பாடலடியில் வருகின்ற திருக்கோயில் என்ற கோயில் இங்குள்ள திருப்படைக் கோயில்களில் ஒன்றான திருக்கோயில் சித்திரவேலாயுதர்கோயிலைக்குறிப்பதாகக் கொண்டால், அக்கோயில் வரலாற்றுடன் செட்டிகளுக்குள்ள தொடர்பு குறைவு. திருப்படைக் கோயில்களில் வெருகல் சித்திரவேலாயுதர் கோயில், கோயிற் போரை தீவு சித்திரவேலாயுதர் கோயில் ஆகிய இரு கோயில்கள் மாத்திரம் செட்டிகளுடன் தொடர்புடையவை. இவற்றில் வெருகல் சித்திரவேலாயுதர் கோயிலில் பங்கு கூறும் முறை இருக்கவில்லை. பங்கு கூறும் முறை மட்டக்களப்பு தேசத்துக்கே உரியது. ஆகையினால் இங்கு திருக்கோயில் என்பது நாகப்பச் செட்டியின் உபயமான கோயிற் போரைதீவு சித்திரவேலாயுதர் கோயிலைக் குறித்து நிற்கின்றது எனக்கொள்ள இடமுண்டு. கோயில் போரை தீவு சித்திரவேலாயுதர் கோயிலின் தோற்றத்துடன் தொடர்புடைய கி.பி.15ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது (பத்ம நாதன், சி 2013: 448.)

**கதைகள் (Tales)**

யாப்பிலக்கண விதிகளுக்குக் கட்டுப்படாது, வசன நடையிலே கூறப்பட்டுவரும் கதைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட வகைக்குள் அடங்குகின்றன. இக்கதைகள் வரலாற்றுக் கதைகள், ஐதிகக் கதைகள் என இருவகைப்படும். (Vansina, J1969: 114) பெரும்பாலும் கதைகள் வரலாற்று நோக்கத்தினைக் கருத்திற்கொண்டே கூறப்பட்டு வருகின்றன. இக்கதைகளின் பிரதான நோக்கம் வரலாறு கூறுவதாக இருப்பினும், படிப்பினையையும், உரிமைகளை நிலை நாட்டுவதனையும் உபநோக்கங்களாகக் கொண்டுள்ளன. இந்த உபநோக்கங்களுக்குத் தக வரலாறு திரிபடைந்திருக்கும் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. கதைகளின் திரிபுகளுக்கு அடிப்படை ஐதிகங்களாகும்.

திருப்படைக்கோயில்களின்பழமையான வரலாறு பற்றி அறியக் கூடிய மரபு வழிக்கதைகளில் வரலாற்றுக் கதைகளுக்கு குறிப்பிடத்தக்க இடம் உண்டு. மட்டக்களப்பு மான்மியத்தில் இக்கோயில்களின் தோற்றத்தினையும் புனர்நிர்மாணத்தினையும் அறியக் கூடிய பல கதைகள் உள்ளன. அவற்றிலே திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில் பாழடைந்திருந்ததனையும் பின்னர் அது புனர்நிர்மாணம் செய்யப்பட்டதையும் பிரசன்னசித்து சரித்திரம் கூறுகின்றது. அதன் பின்னர் மனுநேயகயவாகு என்னும் மன்னன் திருக்கோயிலை ஆகமப் பிரமாணங்களுக் கேற்ப புதுப்பித்துக் கட்டினான் என்ற சரித்திரமும் கூறப்படுகின்றது. மனுநேயகயவாகு கோயிலைப் பராமரிக் கக் கூடிய ஏழு இராசர்கள், படையாட்சி குலத்தில் மூன்று வன்னியர்கள், ஐந்து பண்டாரங்கள், அந்தணர், பதினாறு சிறைக்குடிகள் ஆகியோரை திருப்பணிகள் புரியவென நியமித்தான் என மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.(நடராஜா,எப். எக்ஸ்.சி1998:87)இக்கதைகள், கோயிலின் தோற்றம் பற்றி அறியக்கூடிய வரலாற்றுக் கதைகளில் பிரசித்தமானவை. கோயிலின் புனர் நிர்மாணத்துடன் கூறப்படும் மன்னர்களின் ஆட்சியாண்டில் தெளிவின்மை புலப்படுகின்றது. ஆனால் கோயிலுக்குப் பணிபுரியவென நியமிக்கப்பட்ட பணியாளர்களின் திருத்தொண்டு பற்றிய மரபுகள் இன்று வரையும் நிலைத்து நிற்கின்றமை குறிப்பிடற்குரியது.. கிழக்கிலங்கையிலுள்ள அனைத்துத் திருப்படைக்கோயில்களுக்கும் வேடுவர்களுக்கும் உள்ள தொடர்பு அங்கு வழக்கிலுள்ள ஐதிகக் கதைகள் வாயிலாக அறியமுடிகின்றது. அவற்றிலே ஓரிரு கதைகளை உதாரணத் திற்காக் காட்ட முடியும்.

**வெருகல் சித்திரவேலாயுதர் கோயிலுடன் தொடர்புடைய கதை**

“வெருகல் சித்திரவேலாயுதர் கோயிலை அமைத்தவர் நல்லநாதச் செட்டியார் என்பது வாய்மொழிக் கதை மரபாகும். வெருகல் பிரதேசத்தில் சுயம்புவாகத் தோன்றிய வேலினை வைத்து அங்கிருந்த பழங்குடி மக்கள் வழிபட்டுவந்த வேளையில், தீராத தொழுநோயாற் பாதிக்கப்பட்டிருந்த நல்லநாதச் செட்டியார், தம்மைப் பீடித் திருந்த நோயை இல்லாமற் செய்யும் பொருட்டுக் கதிர்காமத்துக்குப் பாத யாத்திரை செல்லப் புறப்பட்டார். பிரயாணக்களைப் பாற் சோர்புற்றவராகக் காணப்பட்டார். தமது தாகத்தைப் போக்குவதற்குப் பக்கத்தில் நீரோடை ஒன்றைக் கண்டார். தாகம் தீர்த்து விட்டு நீரோடைக் கரையில் சற்று நேரம் அயர்ந்து தூங்கினார். அவரை அங்கு கண்ட ஆயுதம் தாங்கிய வேடுவர் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டது. அவருக்குப் பரிட்சயம் இல்லாத மொழியில் வேடுவர் தலைவன் அவருடன் உரையாடினான். அவனின் பாஷை அறியாத செட்டியார் கதிர்காமத்திற்கு யாத்திரை போவதாகக் குறிப்பினால் அறியப்படுத்தினார். அவன் தான் வைத்திருந்த ஆயுதங்களைக் கீழே

போட்டு விட்டு மான் தோல் ஒன்றினை எடுப்பித்துச் செட்டியாரை அதிலே இருக்கச் செய்தான். பின் அவருக்கு வேண்டிய உணவு வகைகளைக் கொடுத்து இரவாகியதும் வேடுவர் கூட்டத்தினர் அங்கிருந்து காட்டினுள் மறைந்தனர்" (குணபால சிங்கம், வ2015:137)

சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலுடன் தொடர்புடைய கதை: "முன்னொரு காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த சிகண்டி முனிவர், கொடிய விலங்குகள் கூடியிருக்கும் காட்டிலே அத்திமரம் ஒன்றின் கீழ் தவம்புரிந்தனர். அங்கிருந்த வனவேடர்கள் அவரைக்கண்டு பணிந்து தொழுதனர். சிகண்டி முனிவர் அவர்கள் மீது இரக்கம்கொண்டு அருள் மொழிகளை வழங்கி அவ்விடத்தில் வேலாயுதம் ஒன்றை நட்டு அதனை வழிபடுமாறு அவர்களை வேண்டிக் கொண்டார். அன்று முதல் வேடுவர்கள் அவ்வேலை வழிபாடு செய்து வந்தனர்" (குணபாலசிங்கம், வ 2015:137)

எனவே மேற்குறித்த ஐதிகக் கதைகள் திருப்படைக் கோயில்களின் தற்காலச் செயல்நிலைத் தளத்திலே முக்கியமான ஆதாரங்களாக் கொள்ளத்தக்கவை ஆகும். திருப்படைக்கோயில்களில் பேணப்படுகின்ற வேடுவ சம்பிரதாயங்களை முன்னிறுத்திப் பார்க்கின்ற வேளையில் இவை நன்கு புலப்படும்.

**பத்தாசிகள்** (Paththasi)

சமய சம்பந்தமான சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும் மந்திரங்கள், அவற்றின் மொழிப்பிரயோகம் ஆகியவற்றினை ஆபிரிக்க சமுதாயங்களின் வரலாற்றுச் சான்றுகளாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் கிழக்கிலங்கையில் உள்ள சில திருப்படைக் கோயில்களில் வழக்கிலுள்ள மரபுவழியான வழிபாட்டு முறைகளையும், அவற்றிற்குரிய மந்திரங்களையும் பாவனைகளையும் தொகுத்துக் கூறுகின்ற பத்தாசிகளை நாட்டார் வழக்கியல் மூலமாகக் கொள்ளமுடியும். ஆரம்பகாலத்தில் பத்தாசிகள் சுருதி முறையிலே வழங்கி வந்தன. பிற்காலங்களிலே தான் அவை ஏட்டில் பதிவு செய்யப்பட்டன. பத்தாசிகளில் வழிபாட்டு மந்திரங்கள் குறிப்பிடத்தக்கவை. பத்தாசிகளின் செயல்நிலைப் பயன்பாடு திருப்படைக் கோயில்களுடன் இணைந்திருக்கின்ற குமார தெய்வ வழிபாட்டு முறையில் காணத்தக்கது. குமார தெய்வம் வேடுவ மக்களின் குலதெய்வம். இவ்வடிப்படையில் பழங்குடியினரின் சமய மரபுகளையும் வழிபாட்டு முறைகளையும் விபரிக்கின்ற பத்தாசிகளை புராதன நாட்டார் வழக்கியல் மூலமாகக் கொள்ள முடியும்.

**நாட்டுக் கூத்துக்கள்** (Kothou)

திருப்படைக் கோயில்களின் வரலாற்றைப் பொறுத்து நாட்டார் வழக்கில் பிரதான இடம் வகிக்கும் கூத்துக்களையும் சான்றுகளாக உபயோகிக்க முடியும். நாட்டுக் கூத்துக்கள் பண்பாட்டு வரலாற்றினை வரைவதற்கும் உதவுபவை ஆகும். இவ்வடிப்படையில் பண்டைக் காலங்களிலே திருப்படைக் கோயில்களின் விழாக்காலங்களிலும் ஏனைய விசேடகாலங்களிலும் கோயில் முன்றலில் அமைத்து கூத்துக்கள் ஆடப்படுவது வழக்கம். அக்கூத்துக்களில் மகுடிக்கூத்து மிகப்பழமையானது. ஒரு குழுவை இன்னொரு குழு தமது மந்திரதந்திரங்களினால் வெற்றி கொண்ட கதை மூலத்தினைத்தான் மகுடிக் கூத்து கொண்டுள்ளது. (மௌனகுரு, சி 1980:223) இக்கூத்தில் வருகின்ற வேடன், வேடுவிச்சி, குறவன், குறத்தி, மந்திரங்களில் வல்லவர்களாகக் கருதப்படும் காமாட்சி, மீனாட்சி போன்ற மலையாளப் பெண்கள் ஆகியோர் பிரதான பாத்திரங்களாகும். (மௌனகுரு, சி 1980: 223) அதனைத் தொடர்ந்து வடமோடி, தென்மோடி என இரு வகைப்படும் கூத்துக்கள் அறிமுகமாகின்றன. இவை கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது

என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (கந்தையா, வி.சி 1969 பதிப்புரை) இக்கூத்துக்களிலே புராண இதிகாசக்கதைகள் கதை மூலமாக அமையும். அவற்றிலே வள்ளியம்மன் நாடகம், சுரசங்காரம் ஆகியவை இக்கோயில்களிலே ஆடப்பட்ட கூத்துக்களில் பிரதானமானவை. (குணபாலசிங்கம், வ. 2015:290 - 291) இவற்றினுடைய கதை மூலம் கந்தபுராணமாகும். கந்த புராணம் தமிழ் நாட்டு வரலாற்றிலே கி.பி. 13ஆம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்றது. இக்கூத்துக்களை ஆடுபவர்களின் ஒப்பனைகளையும், உடையலங்காரத் தினையும் நோக்குகின்ற வேளையில் அது கேரளத்து கதகளி நடனத்தின் சாயல்களைத் தழுவியிருப்பதனை அறிய முடிகின்றது. (கோபால சிங்கம், சீ 2007: 107.)

மட்டக்களப்பு வரலாற்றினை நோக்குகின்ற வேளையில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் காலத்துக்குக் காலம் மக்கள் இங்கு வந்து குடியேறியிருப்பதனை அறிமுடிகின்றது. இவற்றின் ஒரு பிரதிபலிப்பாகவே இக்கலை வடிவத்தினைக் கொள்ளமுடியும்.

## நிறைவாக

திருப்படைக் கோயில்களின் பழமையான வரலாறு பற்றிய சான்றாதாரங்கள் கிடைக்காவிட்டாலும் அங்கு மரபுவழியாகப் பேணப்பட்டு வருகின்ற வழமைகளும், சம்பிரதாயங்களும் குறிப்பிடத்தக்கவகையில் கோயில்களின் புராதனத்தன்மையினை வெளிப்படுத்துகின்றன. கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களின் வழிபாடுகளில் அங்கு வாழும் பழங்குடி மக்களாகிய வேடுவ மக்களுக்குள்ள நெருக்கமான தொடர்பினை அறியமுடிகின்றது. அக்கோயில்களில் வழக்கிலுள்ள வேடுவ மக்களின் சம்பிரதாயங்கள் அவற்றின் புராதன வரலாற்றினை அறிவதற்கான நாட்டார் வழக்கியல் சான்றாகக் கொள்ளமுடியும். அத்துடன் இக்கோயில்களில் தற்காலம் வரைக்கும் பேணப்படுகின்ற வழக்கங்களில் பெரும்பாலானவை காலத்துக்குக் காலம் இங்கு ஏற்படுத்தப்பட்ட தென்னிந்திய குடியேற்றங்களால் உண்டாவை. கல்வெட்டுக்கள் முதலான சாசனங்கள் அரசர்களையும் அவர்கள் வழங்கிய தானங்களையும் விபரித்து நிற்க, நாட்டார் வழக்கியல் மூலங்கள் சாதாரண மக்களின் வாழ்வியல் அம்சங்களையும் அவர்களது வழமைகளையும் விபரித்து நிற்கின்றன. எனவே இக்கோயில்களுடன் தொடர்புடையதாக விளங்குகின்ற நாட்டார் வழக்கியற் சான்றுகளிற் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. இருப்பினும் பலவகைப்பட்ட சான்றுகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு, இக்குறைபாடுகளை நீக்கி புதிய வரலாற்றியல் வரைபுக்கு வலுச்சேர்க்க முடியும்.

## உசாத்துணை நூல்கள்

### தமிழ் நூல்கள்

1. இந்திரபாலா, கா., (1980) "இலங்கைத் தமிழர் வரலாறும் நாட்டார் வழக்கியலும்" கா.சிவத்தம்பி (பதி) இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
2. கமலநாதன், சா. இ., (பதி.) (2005) *மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. கந்தையா, வி.சி. (பதி), (1969). *அனுருத்திர நாடகம்*, மட்டக்களப்பு.
4. கந்தையா, வி.சி. (1997). *மட்டக் களப்புச் சைவக் கோயில்கள்*, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
5. குணபாலசிங்கம், வ., (2015) இலங்கையில் முருகவழிபாடு - கிழக்கிலங்கை முருகன் கோயில்களின் வழிபாட்டு முறைமைகள் பற்றிய சிறப்பாய்வு (கலாநிதிப்பட்ட ஆய்வேடு, அச்சில் வராதது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

6. கோபாலசிங்கம், சீ. (2007). மலையாள நாடும் மட்டக்களப்பும், ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.
7. சிவத்தம்பி, கா. (பதி) (1980). இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
8. நடராஜா, எப். எக்ஸ். சி., (பதி.). (1998). மட்டக்களப்பு மான்மியம், கலாசாரப் பேரவை மட்டக்களப்பு
9. பத்மநாதன், சி. (1994). இலங்கையின் இந்துக்கோயில்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
10. பத்மநாதன், சி. (2000). இலங்கையில் இந்துக் கலாசாரம்,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
11. பத்மநாதன், சி. (2006). இலங்கைத் தமிழச்சாசனங்கள்- ஐ, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
12. பத்மநாதன், சி. (2013) இலங்கைத் தமிழச் சாசனங்கள்- II, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.
13. பரமசிவன், தொ. (1989). அழகர் கோயில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு.
14. மயிலை சீனி. வேங்கடசாமி. (1989) சங்க காலத்துப் பிராமிக்கல்வெட்டுக்கள், சென்னை.
15. மௌனகுரு, சி. (1980). "நாட்டார் கூத்தின் சமூக அத்தியாவசியங்கள்– கிழக்கிலங்கை நாட்டுக் கூத்துக்களின் சமூகத்தளம், பயில் நிலை பற்றிய ஆய்வு" கா.சிவத்தம்பி (பதி) இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்காற்றியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### ஆங்கில நூல்கள்

1. Mahadeva, I., *Early Tamil Epigraphy*, (2014), Central Institute of Classical, Chennai.
2. Tylor, E.B., (1876), Researches in ti the Early History of mankind, Estes & Lauriat.
3. Vansina, J. 1965, Oral Tradition- A Study in Historical Methodology, Routledge & kegan paul Ltd, London.

### தமிழ் அகராதிகள்

1. நர்மதாவின் தமிழ் அகராதி, (2013)
2. தமிழ்ப் பேரகரமுதலி, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை